## டிசம்பர் – 09 – சனி

### ஆண்டவர் எருசலேமை மீண்டும் கட்டி எழுப்பிகின்றார்: திபா. 147:2

### முதல் வாசகம் ஏசாயா 30 : 19 – 21, 23 – 26

சீயோன் வாழ் மக்களே, எருசலேமில் குடியிருப்போரே, நீங்கள் இனி ஒருபோதும் அழமாட்டீர்கள் அவர் உங்கள்மேல் திண்ணமாய் அருள்கூர்வார். நீங்கள் கூப்பிடும் குரலுக்குச் செவி சாய்த்து உங்களுக்கு மறுமொழி அளிப்பார். என் தலைவராகிய உங்கள் போதகர் உங்களுக்கு துன்பமெனும் அப்பத்தையும் ஒடுக்குதலெனும் நீரையும் கொடுத்திருந்தாலும், இனித் தம்மை மறைத்துக்கொள்ள மாட்டார் உங்கள் போதகரை நீங்கள் கண்ணால் காண்பீர்கள். நீங்கள் வலப்புறமோ, இடப்புறமோ எப்பக்கம் சென்றாலும் "இதுதான் வழி, இதில் நடந்து செல்லுங்கள்" என்னும் வார்த்தை பின்னிருந்து உங்கள் செவிகளில் ஒலிக்கும். நீங்கள் நிலத்தில் விதைத்துள்ள விதைமீது ஆண்டவர் மழை பொழிவார் நிலத்தின் விளைவான உணவு செழுமையாகவும் மிகுதியாகவும் இருக்கும் அந்நாளில் உன் மந்தை பரந்த மேய்ச்சல் வெளியில் மேயும். முறத்தாலும் சுளகாலும் தூற்றப்பட்டுச் சுவையூட்டப்பட்ட தீனியை நிலத்தை உழும் காளைகளும் கழுதைகளும் தின்னும். கோட்டைகள் இடிந்து விழுகின்ற மிகப்பெரும் அழிவுநாளில் வானளாவிய மலைகள் அனைத்தின் மேலும் உயர்ந்த குன்றுகள் அனைத்தின் மேலும் கால்வாய்களும் நீரோடைகளும் தோன்றும். ஆண்டவர் தம் மக்களின் முறிவுகளைக் கட்டி, தாம் அடித்து ஏற்படுத்திய காயங்களைக் குணமாக்கும் நாளில், நிலவின் ஒளி கதிரவன் ஒளிபோலாகும் கதிரவன் ஒளி ஏழு பகல்களின் ஒளி ஒன்று திரண்டாற்போல ஏழு மடங்காகும்.

**பதில்பாடல்:** ஆண்டவருக்காகக் காத்திருப்போர் நற்பேறு பெற்றோர்

### நற்செய்தி : மாற்கு 10: 1 - 8

அக்காலத்தில் இயேசு அங்கிருந்து புறப்பட்டு யூதேயப் பகுதிகளுக்கும் யோர்தான் அக்கரைப் பகுதிக்கும் வந்தார். மீண்டும் மக்கள் அவரிடம் வந்து கூடினர். அவரும் வழக்கம் போல மீண்டும் அவர்களுக்குக் கற்பித்தார். பரிசேயர் அவரை அணுகி, "கணவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா?" என்றுகேட்டு அவரைச் சோதித்தனர். அவர் அவர்களிடம் மறு மொழியாக, "மோசே உங்களுக்கு இட்ட கட்டளை என்ன?" என்று கேட்டார். அவர்கள், "மோசே மணவிலக்குச் சான்றிதழ் எழுதி அவரை விலக்கிவிடலாம் என்று அனுமதி அளித்துள்ளார்" என்று கூறினார்கள். அதற்கு இயேசு அவரிகளிடம், "உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே அவர் இக்கட்டளையை எழுதி வைத்தார். படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள். "ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர். "இனி அவர்கள் இருவர் அல்ல. ஒரே உடல்" என்றார்.

**தியானம்:** கிறிஸ்துவின் வருகைக்கு எங்களைத் தயார்படுத்தும் இன்றைய நாளில் இயேசு இவ்வுலகற்கு வந்து எங்களை வழிநடத்தும் ஆயனாக இருப்பார் என்பதோடு எவ்வாறான சூழ்நிலையிலும் (கஷ்டமோ, துன்பமோ, வேதனையோ, நெருக்கடியோ எதுவாக இருந்தாலும் யாவற்றையும் ஏற்று அவற்றை கடந்து செல்ல வேண்டும் என்பதை இன்றைய முதல்வாசகத்தில் ஆணித்தரமாகக் கூறுகின்றார். வலப்புறமோ, இடப்புறமோ எங்கு சென்றாலும் "இதுதான் வழி இதில் கடந்து செல்லுங்கள்" (எசா.30:21). ஏனென்றால் எமக்கு ஏற்படும் ஒவ்வொரு தீமையான நிகழ்வுகளாலும் நம்பிக்கையில் தளர்வுற்று இறைவன் எங்கள் கூடவே இருக்கின்றார் என்பதை மறந்து நாங்கள் வாழ்கின்றோம். நற்செய்தி வாசகத்திலும் கூட அங்குள்ள மக்களைப்பார்த்து ஆயனில்லா ஆடுகள் போல் இருப்பதைக் கண்டு பரிவு கொள்கின்றார். ஏனெனில் அவர்களை நலவழிப்படுத்தவோ, நல் அறிவுரைகள் வழங்கவோ யாரும் இல்லாது அநாதைகளாக, ஆதரவற்றவர்களாக காணப்பட்டார்கள். அவ்வாறானவர்களை விண்ணரசிற்கு செல்வதற்கு தயார்படுத்தவே சீடர்களை அனுப்பிவிடுகின்றார். அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு என்று அறுவடையின் தலைவரிடம் மன்றாடும்படியாக கூறினார். "நானே வழி" என்று கூறிய இயேசு கூலியாட்களில் ஒருவராக எங்களையும் தெரிந்தெடுத்திருக்கின்றார். ஆனால் வழியில் நடக்காமல் நம்பிக்கையில் தளர்ந்தவர்களாக அவர் அழைப்பை ஏற்க மறுத்து இருளின்பாதையில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இவ்வாறான பாவ வாழ்விலிருந்து விடுதலைபெற்று ஒளியின் பாதையில் நடக்க எமது பாவங்களுக்காக மனம் வருந்தியவர்களாக தினமும் செபித்து பிறக்க இருக்கும் குழந்தை இயேசு எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடிகொள்ள எங்களைத் தயார்படுத்துவோம்.